# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண்.208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை- 600 106
தொலைபேசி எண் : 2363 5010, 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் – tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

<u>செய்தி வெளியீடு எண் **18/2019**</u> <u>நாள் **1212.2019**</u>

### <u>சாதாரண உள்ளாட்சித் தேர்தல்–2019</u>

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தல்களுக்கான தேர்தல் அறிவிக்கைகளை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் வெளியிட்டதைத் தொடர்ந்து சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களைத் தவிர்த்து ஏனைய மாவட்டங்களில் **09.12.2019** முதல் ஊரக உள்ளாட்சி பதவியிடங்களுக்கு வேட்புமனுக்கள் பெறப்பட்டு வருகின்றது. வேட்புமனுக்களை பெறுவதற்கான கடைசி நாள் **16.12.2019** ஆகும். **14.12.2019** சனிக்கிழமை அன்று பொது விடுமுறை இல்லை என்பதால் அன்றைய நாளில் அனைத்து ஊரக உள்ளாட்சித் தேர்தல்களுக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்களும், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களும் வேட்புமனுக்களை பெறுவதற்காக **14.12.2019** அன்று அவர்களது அலுவலகத்தில் இருக்க வேண்டும் என்று தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும், **14.12.2019** சனிக்கிழமை அன்று மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர், கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் ஆகிய பதவியிடங்களுக்கு வேட்பாளர்கள் தங்களது வேட்புமனுவை தாக்கல் செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

12/12/19
மக்கள் தொடர்பு அலுவலர்